TAMIL CATHOLIC ASSOCIATION OF VICTORIA, AUSTRALIA
விக்டோரியா தமிழ் கத்தோலிக்க சங்கம், ஆஸ்திரேலியா

# Messenger
# தூதுவன்

கிறிஸ்மஸ் வெளியீடு / December 2022

https://australiantamilcatholics.com.au / tcavinfo@gmail.com




AMR
Blinds & Curtains
Xmas Discount
30% off
Competitive Price
Free Measure & Quote
#Roller
#Sunscreen
#Vertical
#Roman
#Sheer curtains
#Plantation
And
#Pelmets
Call on 0420222929, Rathees

# ஞானத் தந்தையின் செய்தி!



**இறை இயேசுவில் பிரியமான அன்பு சகோதர சகோதரிகளே!**

பிறக்கவிருக்கும் பாலக இயேசுவின் அன்பும் அருளும் சமாதானமும் நம்பிக்கை நிறைந்த வாழ்வும் என்றும் உங்கள் மீதும் உங்கள் குடும்பங்கள் மீதும் நிறைவாகப் பொழியப்படுவதாக.

“காரிருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள் சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது.” (எசயா 9:2)

மீண்டும் ஒரு கிறிஸ்துவின் பிறப்பின் ஞாபகமான செய்தியைக் கேட்கின்றோம். 2022ஆம் ஆண்டின் நகர்வுகளை மீட்டுப் பார்ப்போமேயானால், காரிருளும், கடும் போரும், தீராத நோயும், சாவும் மலிந்து போய், கவலையும் கண்ணீரும் தலைவிரித்துத் தாண்டவமாடியது. நாட்டை எதிர்த்து நாடும், அரசை எதிர்த்து அரசும், இனத்தை எதிர்த்து இனமும் சாவுமணி அடித்து சரித்திரம் படைக்கும் நோக்கோடு முனைப்புக் கொண்டுள்ள ஒரு நேரம், காலம். அன்று இயேசுவின் பிறப்பு இருள் சூழ்ந்த நிலையில் வாழ்ந்த மக்களுக்கு விடிவைக் கொணர்ந்தது. அவ் விடிவே மனித அவலங்களுக்கு மீட்புமாயிற்று. கிறிஸ்துவின் பிறப்பு அன்று அவலத்தில் வாழ்ந்த மனிதனுக்கு மீட்பைக் கொணர்ந்து விண்ணகத் தந்தையின் இரக்கத்தை மண்ணுலகிற்கு உணர்த்தியது.

“விண்ணிலே இறைவனுக்கு மகிமையும், மண்ணிலே நல் மனத்தோருக்கு அமைதியும் உண்டாகுக.” (லூக்கா 2:14) என்கின்ற விண்ணக தூதர்களின் நற்செய்தி முழக்கம் எம் செவிகளில் கேட்கிறது. இறைவன் மனிதன் மேல் கொண்ட அளவுகடந்த அன்பினால் மனுவுரு எடுத்து எம்மில் ஒருவரைப்போல் நாசரேத்தில் பிறந்தார். என்பதை கிறிஸ்து பிறப்பு விழா அறிக்கையிடுகின்றது.

இப் பெருவிழாவின் போது உலகம் முழுவதிலும் பல்வேறு மொழிகளிலும் பாடப்படும் ஒரே பாடல் “உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக, உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக.” என்பதாகும். (லூக்கா 2:13-14) இப் பெருவிழாக்காலத்தில் அவருக்கு உகந்தவர்களாகி, எல்லோருக்கும் அமைதியையும் அன்பையும் உண்டாக்கும் கருவிகளாகவே நாம் அழைக்கப்படுகின்றோம்.

இயேசு ஏழ்மையும் எளிமையும் நிறைந்த சூழலான மாட்டுத் தொழுவத்தில் பிறந்தது, மாட்டுத் தொழுவத்திலிருந்து வெளிப்படும் செய்தியை நாம் பின்பற்றுவதற்கு சவாலாக அமைகிறது. தனது வாழ்வாகிய ஏழ்மையையும் எளிமையையும் நாம் பின்பற்ற வேண்டும் என்பதே இயேசுவின் தேவையாக இருக்கிறது.

மலர்கின்ற புதிய ஆண்டில் அனைவரும் மன மகிழ்வுடன் நிறைவாழ்வு வாழ, இறை ஆசீருடன் கிறிஸ்மஸ் புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். பிறக்கவிருக்கும் பாலகன் இயேசு உங்களை ஆசீரால் நிரப்புவாராக.



**அருட்பணி அன்ரன் ஆசீர்வாதம்பிள்ளை**
**தமிழ் ஆன்மீகப் பணியகம்**
**மெல்போன் - அவுஸ்திரேலியா**

# CRESTON®
## REAL ESTATE
Change dreams into reality



# Thinking of Selling?

**Would you like : A Free Market Appraisal?**
**A Second Opinion?**
**Sales Advice?**

## Call Ashton Ashokkumar NOW!
## 0405 559 766




Dandenong Central




Metro Village, Dandenong




Dandenong North




Dandenong North

**www.crestonrealestate.com.au** **PH : 03 9792 0042**

**264 Lonsdale St, Dandenong - 3175**



**இறையேசுவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே!**

கிறிஸ்து இயேசு பிறப்பு விழாவை இன்று கொண்டாடும் நாம் இறைமகன் இயேசு கிறிஸ்து இன்று எமது இல்லங்களிலும் உள்ளங்களிலும் மீண்டும் பிறந்து எம்மை இன்பத்தில் நிலைத்திருக்க செய்ய வேண்டும் என்று உங்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

இவ்வருடமானது விக்டோரிய தமிழ் கத்தோலிக்க சங்கத்திற்கு ஒரு முக்கியமான மைல்கல்லாக அமையும் ஆண்டு. அதாவது எமது சங்கமானது விக்டோரிய தமிழ் கத்தோலிக்க மக்களின் சமய மற்றும் கலை கலாச்சார மேம்பாட்டுப் பணியின் 35வது வருட நிறைவை கொண்டாடி நிற்பதை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இதேபோல வருகின்ற காலங்களிலும் மேலும் பல வழிகளில் எமது அருட்தந்தை அன்ரன் புனிதகுமாருடன் இணைந்து பல நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்ட மிட்டுள்ளோம் என்பதனையும் அன்புடன் அறியத் தருகின்றேன்.

கடந்த இரண்டு வருடங்களாக கோவிட் தொற்று ஏற்பட்டு எமது அன்றாட நிகழ்வுகள் பலவும் முடங்கிய நிலையில் எமது சங்கத்தின் வருடாந்த கிறிஸ்மஸ் ஒளி விழாவானது வழமைபோல் மேற்கொள்ள முடியாமல் போனது. இம்முறை மீண்டும் எமக்கு வழமைபோல் இந்நிகழ்வை மேற்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு இறைவனுக்கு நன்றி கூறுவதோடு, நடைபெறவிருக்கும் ஒளி விழாவை சிறப்பாக மேற்கொள்ள தமது சிரமம் பாராது பல வழிகளில் உதவிசெய்து கொண்டிருக்கும் அனைவருக்கும், மற்றும் விளம்பரங்கள், நன்கொடைகள் மூலம் உதவிய அன்புள்ளங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இறைமகன் இயேசு கிறிஸ்து பிறப்பு தினமானது உங்களையும் உங்கள் உறவுகளையும் இன்பத்தில் நிலைத்திருக்கவும், உங்கள் எதிர்கால திட்டங்கள் யாவும் முழுமையாக நிறைவு பெறவும் உங்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களையும், பிறக்க விருக்கும் புதிய வருடமானது உங்கள் அனைவருக்கும் இன்பம் கலந்த நல்லாண்டாக அமைய எனது மனமார்ந்த புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

**என்டனி ராஜ்குமார் சூசை**
**President**
**TCAV**

# Nick Canisius Accounting

- Individual, Company, Trust and partnership tax returns
- Self-Manage super fund (SMSF) Year End Report, Audit and Tax Return
- BAS Lodgement
- ABN, GST and Company Registration
- Any other accounting and tax needs

**Contacts:**

Mr Gnanasooriyar Canisius (Nick)
Phone: 0431780348
E-Mail: nickcanisius@gmail.com

Certified practising accountant (CPA)
Registered Tax Agent
Registered ASIC Agent

# St George Finance Solutions

ST.GEORGE
Finance Solutions

**Our Services**

Home Loan
Personal Loan
Car Loan
Business Loan
Refinance

**Contact Info:**

Victor St George
7 Allumba Way
Wollert VIC 3750
Phone: 0425 784 648
Hello@stgeorgefinancesolutions.com

Lending services are provided by
St George Finance Solutions Pty Ltd
ABN No 26656481873
(Authorised Credit Representatives No 389328)

# பதிப்பாசிரியர் பக்கம்

நீண்ட காலத்தின் பின் கிறிஸ்து பிறப்பு விழா "தூதுவன" வழியாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த இரண்டு ஆண்டு காலமாக மிகவும் இக்கட்டான காலகட்டத்திலும் பலவிதமான நெருக்கடிகளின் மத்தியிலும் எமது ஆன்மீக தேவைகளை சிறப்பாக நிறைவேற்றி தந்த எமது ஆன்மீக குருவிற்கும் சங்க உறுப்பினர்களுக்கும் மனமாந்த நன்றிகளை தெரிவித்து நிற்கின்றேன். இப்புதிய ஆண்டிலே மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் புதிய நிர்வாகக் குழுவில் நானும் ஒரு அங்கத்தவனாக இருப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நாம் அனைவரும் கடந்து வந்த இந்த வைரசின் தாக்கங்கள், பொருளாதார சிக்கல்கள், போர் சூழல்கள், இயற்கையின் அனர்த்தங்கள் அனைத்திலும் பாதுகாத்து வழிநடத்திய இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம். இச் சூழ்நிலைகள் முற்றிலும் மாறி ஒரு நிரந்தரமான, பாதுகாப்பான, அமைதியான ஒரு கிறிஸ்மஸ் நாளை கொண்டாடுவதற்கு தேவையான சூழல் உருவாக எங்கள் இதயங்களை இறைவனுக்கு உகந்த வழியில் ஆயத்தம் செய்து பாலயேசுவின் பிறப்பை எம் குடும்பங்களில் சமூகத்தில் சந்தோஷமாக கொண்டாடுவோம்.

அனைவருக்கும் என் இனிய நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

**பதிப்பாசிரியர்**

**சிறில் குலேந்திரன்**








# K.K MEAT



**Contact Kamal**

**0401 088 513**

email: kamalvvt@gmail.com

Taylors Hill & Sunshine Vic







**WE SUPPLY AS FOLLOW:**

- Bush Goat
- Skin on Goat
- Lamb
- Camel
- Buffalo
- Venison Tripe
- Beef
- Lamb Mumbar
- Lamb Tongues
- Lamb Feet
- Mutton Tripe
- Beef Tripe
- Beef Feet
- Beef Small Intestine
- Goat Feet
- Goat Tripe
- Goat Testes
- Goat Head
- Sheep Head
- Sheep Runner
- Sheep Brain

**PACK MEAT ALSO AVAILABLE**

# 2023ல் தடைகளைத் தாண்டுவோம்

ஐந்து வயதுச் சிறுவனும், சிறுமியும் விளையாடிக்கொண்டு இருந்தனர். சிறுவன் சிறுமியைப் பார்த்து, “உன்னிடம் எவ்வளவு காசு இருக்கிறது?” என்றான். சிறுமி “ஒரு டொலர்” என்றாள். சிறுமி சிறுவனைப் பார்த்து “நீ எவ்வளவு வைத்து இருக்கிறாய்?” என்றாள். சிறுவன் “இரண்டு டொலர்” என்றான். “இரண்டு டொலரைக் காட்டு” என்றாள் சிறுமி, சிறுவன் ஒரு டொலரைக் காட்டினான். என்ன இரண்டு டொலர் என்று கூறிவிட்டு ஒரு டொலரைக் காட்டுகிறாய்! என்றாள் சிறுமி. அதற்கு அந்தச்சிறுவன் “அப்பா வேலையால் வந்த பின் ஒரு டொலர் தருவதாகக் கூறியுள்ளார். அதையும் சேர்த்துத் தான் இரண்டு டொலர் என்று கூறினேன்” என்றான் சிறுவன்.

ஒரு டொலர் அந்த சிறுவனின் கைக்கு இன்னும் வரவில்லை! இருப்பினும் வந்து விட்டதாக அவன் நம்பினான். இதுவே கிறிஸ்தவ நம்பிக்கையாகும். திருமறை நமக்கு கூறுகிறது, நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி: கண்ணுக்கு புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை. (எபி.11:1) ஆகவே உங்களுக்குச் சொல்கிறேன்: நீங்கள் இறைவனிடம் வேண்டும்போது எவற்றையெல்லாம் கேட்பீர்களோ அவற்றைப் பெற்று விட்டீர்கள் என்று நம்புங்கள்: நீங்கள் கேட்டபடியே நடக்கும். (மாற்கு 11:24) எனவே வரப்போகும் புதிய ஆண்டில் விசுவசிப்போம்! வெற்றிபெறுவோம்!

புதிய ஆண்டில் தடைகளைத் தாண்டுவோம்!<br>
என்னை மட்டும் நம்பும்போது இடறி விழுகிறேன்<br>
எழுந்து நடக்க முடியாமல் தவழ்ந்து தவிக்கிறேன்<br>
என்னுள் வாழும் உம்மை நம்பி எழுந்து அடி வைப்பேன்<br>
இனி இமயமெனத் தடைவரினும் எளிதாய்க் கடப்பேன்<br>
என்றுப் பாடிப் புதிய ஆண்டில் தடைகளைத் தாண்டுவோம்!

**கமிலஸ்**

Himalayinn
www.himalayinn.com

Alpine Ridge Drive, Merrijig
Mount Bulla



For your next dream holiday, book the Himalayinn!
Located in the heart of Mount Bulla



Contact Medde Bandara 0433987885
himalayinnalpine@gmail.com

Or book online at
airbnb.com/himalayinn
www.stayz.com.au

# *Best wishes*

**Learn how to be a quality driver**



**For any level join**

# MED DRIVING SCHOOL

**Contact Medde Bandara**

**0433987885**

கன்னி கருவுற்று ஓர் ஆண்மகனைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர். “இம்மானுவேல் என்றால் கடவுள் நம்முடன் இருக்கிறார்” என்பது பொருள். (மத்தேயூ 1:22-23)

**whatsapp** குழுவின் வழியாக தினசரி வாசகங்களையும், குருவானவர் அருள்பணி. மரிய அந்தோனி அவர்களின் மறையுரைகளைக் கேட்பது வழக்கம். சமீபத்தில் குருவானவர் சொன்ன கதை ஒன்று நினைவிற்கு வருகிறது.

மன்னன் ஒருவன் வேட்டையாட காட்டிற்கு சென்றான். வேட்டையாடும் விறுவிறுப்பில் காட்டிற்குள் வெகுதூரம் சென்றுவிட்டான். காட்டிலிருந்து வெளியேறுவதற்கான வழியைத் தேடிக் கொண்டிருந்தபோது அவ்வழியே வந்த மூன்று வேடர்கள் மன்னனுக்கு உதவி செய்தனர். தனக்கு உதவி செய்த வேடர்களிடம் மன்னன் அவர்கள் என்ன பரிசு கேட்டாலும் தருவதாக சொல்கிறான்.

முதல் வேடன் தனக்கு அழகிய வீடு ஒன்று வேண்டும் என்றான், அது அவனுக்குத் தரப்பட்டது. இரண்டாவது வேடன் தனக்கு தங்கக் காசுகள் வேண்டும் என்று கேட்டான். அதுவும் அவனுக்குத் தரப்பட்டது. மூன்றாவது வேடன் “மன்னா, தாங்கள் அடியேனின் வீட்டிற்கு அடிக்கடி வந்து செல்ல வேண்டும்.” என்று கேட்டுக் கொண்டான். மன்னரும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவனது வீட்டிற்கு வருவதாக வாக்களிக்கிறார். மன்னர் அவனது வீட்டிற்கு செல்வதென்றால் அந்த ஊருக்கு செல்லும் பாதை சரியாக இருக்க வேண்டுமல்லவா. அவனது ஊருக்கு நல்ல சாலைகள் அமைக்கப்பட்டது. அவனது இல்லம் பெரிய மாளிகையாக எல்லா வசதிகளுடன் மாற்றிக் கட்டப்பட்டது. வேடனின் ஊர் செழிப்பாக இருக்க என்னவெல்லாம் செய்யப்பட வேண்டுமோ எல்லாம் செய்யப்பட்டது. மன்னனும் அடிக்கடி வேடனின் வீட்டிற்கு வந்து சென்றான். வரும் போதெல்லாம் நிறையப் பரிசுப் பொருட்களோடு வந்தான். வேடன் சந்தோஷமாக இருந்தான். வேடனோடு சேர்ந்து அவனது ஊர் மக்களும் சந்தோஷமாக வாழ்ந்தனர்.

கிறிஸ்மஸ் என்றாலே நம் நினைவிற்கு வருவது பரிசுகள். ஒருவருக்கொருவர் பரிசுகளைக் கொடுத்து மகிழ்கிறோம். இயேசுவும் நமக்கு பரிசு கொடுக்கக் காத்திருக்கிறார். நாம் எதைப் பரிசாகக் கேட்கிறோமோ அதைக் கொடுக்க விருப்பமாக காத்திருக்கிறார். மூன்றாவது வேடன் ஞானத்தோடு பரிசைக் கேட்டான். மன்னரின் பிரசன்னம் தனது வீட்டிற்கு வேண்டும் என்று கேட்டான். மன்னரின் வருகை, அவனுக்கு மட்டுமல்ல அந்த ஊருக்கே செல்வத்தையும், சந்தோஷத்தையும் கொண்டு வந்தது.

தினமும் கோயிலுக்கு செல்லும் ஒருவரைப் பார்த்து நாத்திகன் ஒருவன் கேட்டானாம் கடவுள்தான் எல்லா இடங்களிலும் இருப்பதாக சொல்கிறார்களே, பிறகு எதற்கு கடவுளைத் தேடி கோயிலுக்கு போகிறாய்? என்று. அதற்கு அந்த விசுவாசி சொன்னானாம், கடவுள் எல்லா இடங்களிலும் இருக்கிறார். என்பது உண்மைதான், ஆனால் கோவிலுக்கு வரும்போது தான் நான் இருக்கிறேன் என்று.

உண்மைதான் இந்த நுகர்ப்பொருள் கலாச்சாரத்தில், அவசர வாழ்க்கைச் சூழலில், பொருள், பதவி, பட்டம், செல்வாக்கு இவற்றைத் தேடி ஓடும் ஓட்டத்தில் நாம் தொலைந்து போகிறோம். நாம் தேடி ஓடும் இந்த மகிழ்ச்சி, நம்மில், நம்மில் குடிகொண்டிருக்கும் இறைப் பிரசன்னத்தில் தான் இருக்கிறது. என்பதை உணர்வதற்கான விழிப்புணர்வை பரிசாகக்கேட்டு பாலன் யேசுவின் முன் முழந்தாளிட்டு வணங்குவோம்.

“இம்மானுவேல் என்றால் கடவுள் நம்மோடு இருக்கிறார்” என்ற இறைவாக்கை பரிசாகக் கேட்போம்.

“ஆண்டவர் யோசேப்புடன் இருந்தார் அவர் செய்த யாவற்றிலும் வெற்றி அளித்தார்” தொடக்க நூல் 39:23

**நிர்மலா அல்போன்ஸ்**




***to grab great deals on latest style***

***🌼Georgette Sarees, 🌼Party wear Sarees***

***🌼Salwar Kameezes 🌼Lehengas 🌼Jewellery***

***🌼Clutches and other Indian accessories***

***🌸We cater for the entire family***

***🌸 Worldwide delivery***

## ***Join our FB page for live online shopping***

## ***on***

## ***Thursday, Friday & Saturday***

## ***from 6pm onward***

Jameez Hair & Beauty

# All Threading & Beauty Services are BACK!

Mon-Thurs 10am-5:30pm
Fri 10am-6pm
Sat 10am-5pm, Sun 10am-3pm

03 9436 9199

SHOP 84, 314-360 CHILDS RD,
STABLES SHOPPING CENTRE
MILL PARK 3082



# சிறுவர் பக்கம்

### தூய ஆவியானவர்க்கு செபம்

தூய ஆவியானவரே! எழுந்தருளி வாரும். விண்ணகத்திலிருந்து உமது பேரொளியின் அருட்சுடர் எம்மீது அனுப்பிடுவீர். எளியோரின் தந்தையே வந்தருள்வீர். நன்கொடை வள்ளலே வந்தருள்வீர். இதய ஒளியே வந்தருள்வீர். உன்னத ஆறுதல் ஆனவரே, ஆன்ம இனிய விருந்தினரே, இனிய தண்மை தருபவரே, உழைப்பின் களைப்பைத் தீர்ப்பவரே, வெம்மை தணிக்கும் குளிர் நிழலே, அழுகையில் ஆறுதலானவரே, உன்னத பேரின்ப ஒளியே, உம்மை நம்புவோருடைய இதயத்தின் ஆழம் நிரப்பிடுவீர். உமது அருள் ஆற்றல் இல்லாமல் மனிதரில் எதுவுமில்லை நல்லது அவனில் எதுவுமில்லை. மாசு கொண்டதைக் கழுவிடுவீர். வறட்சியுற்றதை நனைத்திடுவீர். காயப்பட்டதை ஆற்றிடுவீர். வணங்காதிருப்தை வளைத்திடுவீர், குளிரானதை குளிர் போக்கிடுவீர், தவறிப்போனதை ஆண்டருள்வீர், இறைவா உம்மை நம்பும் அனைவருக்கும் உமது ஏழு கொடைகளையும் வழங்கிடுவீர். புண்ணிய பலன்களையும் வழங்கிடுவீர். இறுதியில் மீட்பை அளித்து அழிவில்லாத இன்பமும் அருள்வீர். ஆமென்.

### திருவருட்சாதனங்கள்

**திருவருட்சாதனங்கள் எவை?**
திருமுழுக்கு, பாவசங்கீத்தனம், நற்கருணை, உறுதிப்பூசுதல், திருமணம், குருத்துவம், நோயில்பூசுதல் என்பனவாகும்.

**திருவருட்சாதனங்களின் வாசல் எது?**
திருமுழுக்கு

**நீங்கள் ஒரு முறை மட்டும் பெறக்கூடிய திருவருட்சாதனங்கள் எவை?**
திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், குருத்துவம்.



**உறுதி பூசுதலை நிறைவேற்றுபவர் யார்?**
ஆயர் (சாதாரணமாக)


### ஒரு குட்டிகதை

ஒரு நாள் ஒரு சிறுவன் தன் இரண்டு கைகளையும் நெஞ்சின் மேல் வைத்தபடி நடந்து கொண்டு இருந்தான். அவன் உடல் மெலிவாய் இருந்தாலும், முகம் 1000w மின்விளக்குகளை ஒரேநேரத்தில் ஒளிரவிட்டது போல் இருந்தது. அவன் நண்பர்கள் தெருவோரம் விளையாடிக்கொண்டு இருக்க அவன் மட்டும் தனியாக எங்கோ சென்று கொண்டு இருந்தான். விளையாட்டில் மும்முரமாய் இருந்த சிறுவர்கள் அவன் தனியாக செல்வதைக்கண்டு, அவன் பெயர் சொல்லி அழைத்தனர். அவனோ தன் உலகின் சிந்தனையில் நடந்தான் அதனை கண்ட அவன் நண்பர்களில் ஒருவனுக்கு கோபம் சுர்ர்ர்ர் என வந்தது. கீழே கிடந்த கல் ஒன்றை எடுத்து அவன் தலையை நோக்கி குறி பார்த்து எறிந்தான். சென்ற கல் தான் சென்ற வேலையை சரியாக செய்தது. கல் தலையில் பட சிறுவன் கீழே விழுந்தான். சிறுவன் விழுந்த மறுகணமே கல்லால் அடித்த அவன் நண்பன் அந்த இடத்தைவிட்டு ஓடியே விட்டான். விழுந்த சிறுவன் இரத்த வெள்ளத்தில் கிடந்தான். அவன் கையோ நெஞ்சின் மீதே இருந்தது. அவன் எதையோ

நெஞ்சோடு மறைத்து இருப்பது தெரிந்தது. சிலர் அவன் கைகளை விரித்து உள்ளே என்ன உள்ளது என்று பார்க்க முயன்றனர். அவன் கை இழகவில்லை. அவன் மரணிக்க போகிறான் என்று அறிந்த ஒருவர் அவனை குருவானவரிடம் தூக்கிச் சென்றார். அது கிறிஸ்தவ மதத்துக்கு எதிரான காலம். கிறிஸ்தவ மதத்தை பின்பற்றுபவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். அல்லது கொல்லப்பட்டார்கள். ஆகவே குருவானவரும் மறைவாகவே வாழ்ந்து வந்தார். அவர் குருவானவர் என்று அறிந்த அந்த சிறுவன் கையை திறந்தான். உள்ளே நற்கருணை, பேழைக்குள் இருந்தது. பேழையை குருவானவர் பெற்றதும் அவன் உயிர் பிரிந்தது. சிறையில் இருந்த கிறிஸ்தவர்களுக்காக நற்கருணையை எடுத்து சென்ற அந்த சிறுவன் வழியிலேயே இறந்தான்.

**தம்பி தங்கைகளே இது ஓர் உண்மை சம்பவம். இந்த சிறுவன் யார்?**

**வேதாகம குறுக்கெழுத்து போட்டி**




**இடமிருந்து வலம்**

1. யாக்கோபு மிகவும் அன்பு செய்த மகன் இவர்
2. யாக்கோபு சகோதரர்களுக்கு ------ கொடுத்தார் இது
3. யாக்கோபுவின் புதல்வர்களின் எண்ணிக்கை இது

**மேலிருந்து கீழ்**

4. யோசேப்பு விற்கப்பட்ட நாடு
5. யோசேப்பு இதற்கு விளக்கம் சொன்னார்
6. யோசேப்பிடம் அவர் சகோதரர்கள் காட்டியது இது



**சிறுவர்களே உங்களுக்கு நத்தார் விழாவில் பரிசுகள் காத்திருக்கின்றன**

மேலேயுள்ள குட்டிக்கதைக்கான பதிலையும், குறுக்கெழுத்துப் போட்டிக்கான பதிலையும், அடுத்த பக்கத்திலுள்ள படத்தை அழகாக வர்ணம் தீட்டி எடுத்து வாருங்கள். பரிசுகளை வெல்லுங்கள்.

# வர்ணம் தீட்டும் போட்டி



# Serendib

*Authentic Sri Lankan Cuisine*

இலங்கையின் சுவைமிகு பாரம்பரிய உணவை எமது
செரண்டிப் உணவகத்திலிருந்து சுவைத்துப் பார்த்துள்ளீர்களா?

ஆம்!

கிங்ஷ்பெரியில் உள்ள ப்ளென்டி சாலையில், லாட்ரோப்
பல்கலைக்கழக நுழைவாயிலை அடுத்து புதிதாக எமது
இலங்கை பாரம்பரிய உணவகத்தை அமைத்துள்ளோம்....



**செரண்டிப்பின் தனிப்பட்ட சிறப்பு என்ன?**

☎ *(03) 7038 0642*

1. நாம் எந்தவிதமான செயற்கையான உணவு சுவையூட்டிகளையும் பயன்படுத்தாது, பாரம்பரிய தனித்துவமான இஞ்சி, உள்ளி, கறி தூள், ஏலக்காய், மிளகு மற்றும் சிலோன் இலவங்கப்பட்டை ( கராம்பு ) போன்ற இயற்கை உள்ளீடுகளைக் கொண்டு உணவை தயாரிக்கின்றோம்.

2. இலங்கையின் பாரம்பரிய உணவு வகைகளில் தனித்துவ நிபுணத்துவம் பெற்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் 30 வருட ங்களுக்கும் மேலான அனுபவம் வாய்ந்தவருமான லிங்கம் கணேசு எமது செரண்டிப் உணவகத்தில் தலைமைச் சமையற்காரராக உள்ளார்.

3. செரண்டிப்பிடமிருந்து ப்ரைட் ரைஷ், ப்ரியாணி, குழம்பு சாதம் ( கறி சோறு ), கொத்து, தோசை, சாம்பார், வடை, ரொட்டி, ஷோட் ஈட்ஸ் போன்ற பல்தேர்வுள்ள வித விதமான உணவுகளை எமது செரண்டிப்பின் பிரசித்தி பெற்ற தயாரிப்பான இலங்கை தேநீருடன் சுவைத்து மகிழ்ந்திடலாம்.

4. ப்ளெண்டி சாலைக்கு மிக அருகிலேயே அமைந்திருப்தால், உங்களின் வேலை சிரமங்களுக்கு மத்தியிலும் நிறுத்தி மிக விரைவாக எமது சேவையை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் உங்கள் வசதிக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளது.

**எமது முகவரி இலக்கம் 951 ப்ளெண்டி சாலை கிங்ஸ்பெரி 3083**




# மீட்பர் இயேசு

மானிடரை மீட்க பிறந்தவர் மீட்பர். ஆம் மீட்பர் இயேசுவின் பிறப்பு நம் எல்லோருக்கும் மீட்பு. எதிலிருந்து மீட்பு?? இந்த கேள்விக்கு நாம் அனைவரும் தரும் உடனடி பதில் பாவம். உண்மைதான். பாவத்திலிருந்து மீட்பு. ஆனாலும் இன்றைய வாழ்வில் நாம் மீண்டு வரவேண்டியவை பல உள்ளன.

நமது சிந்தனை சொல் செயல் சீராக செயல்பட்டால் நம் வாழ்வு சிறப்பாக அமையும். அப்படிப்பட்ட சீரான வாழ்க்கை வாழ நம்மால் முடிவதில்லை. காரணம் மன அழுத்தம், தேவையற்ற பயம், எதிர்மறை எண்ணங்கள் இவை போன்றவற்றிலிருந்து நாம் மீண்டு வருவது மிகவும் அவசியமாக உள்ளது. எப்படி முடியும்??

மீட்பராம் இயேசுவின் வாழ்க்கை நமக்கு மிகப்பெரிய கொடை. அவரின் வார்த்தைகள் நமக்கு மிகப்பெரிய பலம். நம் வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகள் சக்தி மிக்கவை. நன்மை தீமை இரண்டிற்கும் வழிவகுப்பவை. நன்மையா தீமையா என தேர்வு செய்யும் கடமை நம்மிடமே உள்ளதால் நமது வார்த்தைகளை பொறுத்துதான் நமது வாழ்க்கை அமையும். நமது வார்த்தைகள் நலமாக உதிர்ந்தால் வாழ்க்கை வளமாக உதிக்கும்.

நலம் தரும் வார்த்தைகள் நம்மிலே பிறக்க மீட்பர் இயேசுவின் மொழிதான் நமது வழிகாட்டி. வாழ்வு தரும் இறைவார்த்தைகள் நம்மை மன அழுத்தத்திலிருந்தும் தேவையற்ற பயத்திலிருந்தும் எதிர்மறை எண்ணங்களிலிருந்தும் மீட்கிற வல்லமையை கொண்டுள்ளது. அவரவர் தேவைக்கேற்ற, சூழலுக்கேற்ற வயதிற்கேற்ற அறிவுரைகளை ஆறுதலை ஆரோக்கியத்தை தருகின்ற இறைவார்த்தைகளை அனுதினமும் ஆர்வமுடன் நாடுவோம். மீட்பர் இயேசுவின் ஆசீரை பெற்று மகிழ்வோம்.

உங்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு விழா வாழ்த்துக்கள்.

அன்புடன்

**சம்மனசு சகாயராஜ்.**



# Briget Cabinet Pty Ltd

- Kitchen
- Vanities
- Wardrobes
- Laundries



George
Phone: 0451 966 177
Email: brigetcabinet@gmail.com
29 Tatterson Road,
Dandenong South
VIC 3175

# கிறிஸ்து பிறப்பு

மார்கழி மாத குளிரினிலே
மாட்டுத் தொழுவம் அருகினிலே
பாலகன் நீர் வந்துதித்தீர்
பாடுகள் பல பட்டெழுந்தீர்.

மானிடர்கள் எமக்காக
மாண்டும் மீண்டும் வந்தீரோ
மனிதத்தை காத்து நின்ற
மரியாளின் மைந்தன் நீரோ

பெத்தலஹேம் நகரினிலே
பெறப் பெற்ற பொக்கிஷமே
சமாதானம் வேண்டி இங்கு
சரித்திரமாய் ஆனிரே!

பாவங்கள் பல நீக்கி
பரிசுத்தராய் ஆனவரே
இரட்சகனாய் இவ்வுலகை
இயக்கி நிற்கும் அற்புதமே

கல்வாரி மலையினிலே
கண்மூடி போன போதும்
மீட்பராய் வந்து நின்றீர் – நல்ல
மேய்ப்பராய் எமை மாற்றி விட்டீர்

சிலுவைகள் நீர் சுமந்த போதும்
கிருபைகள் என்றும் குறையாதே
மறுபடியும் உம் பிறப்பு வேண்டும்
மனிதம் இன்னும் மாற வேண்டும்.

ஆனந்தமாய் நாமும் இங்கே
ஆண்டவர் நாமம் கொண்டாடுவோம்
பாரெங்கிலும் கிறிஸ்து புகழ்
பரவிட வேண்டிச் செய்திடுவோம்.





**ஷெறின் விபூஷன்**

# Pan Rolls

Our wholesale pan rolls are a delicious, cost-effective snack solution for the commercial foodservice industry, including:

- Cafés
- Restaurants
- Bars
- Pubs & Clubs
- Takeaway food outlets








# Catering

For your next event with a difference



For more information or to place an order, contact us on **0466 078 618**, email us at **info@cress8.com.au** or visit our website **cress8.com.au**.

# கிறிஸ்துவின் பிறப்பும் நம் வாழ்வும்

கிறிஸ்து பிறப்பு காலமென்பது மிகவும் மகிழ்ச்சியான ஒரு நிகழ்வாக எங்கள் எல்லோருக்கும் அமைகிறது. ஆங்கிலத்தில் “It is the most wonderful time of the year” என்று ஒரு பாடல் உண்டு.

திருவிழாக்களில் உறவுகளை வளர்க்கும் காலமிது. வெயில் அதிகம் என்றாலும், மகிழ்ச்சி கொள்ள நினைக்கும் காலம். இறைவனுக்கும் எமக்குமிடையிலான அன்பை, எமக்கும் எமது சக உறவுகளுக்கு மிடையிலான அன்பை வளர்க்க, பலப்படுத்த நமக்குத் தரப்பட்டுள்ள சிறந்த காலமிதுவாகும்.

நாம் எங்கிருந்தாலும் கிறிஸ்துவுக்கு சொந்தமானவர்கள். அவரது பிறப்பினை நினைக்க, மகிழ்ச்சியுற நாம் அழைக்கப்பட்டுள்ளோம். உலகின் கடை எல்லைவரை சாட்சிகளாகத் திகழுங்கள் என்பது தான் கிறிஸ்துவின் அழைப்பு. வீடு, ஆலயம், சமூகம், கடன் திருநாட்கள் மட்டில் இன்று எமக்கு இருக்கக்கூடிய தார்மீகக் கடப்பாடுகள் பற்றி நாம் அறிந்தவர்களாக இருக்க வேண்டும்.

எமது குடும்பங்களில் விலைமதிப்பில்லாத செல்வங்கள் பல உள்ளன. அன்பு, இறைநம்பிக்கை, நட்புறவு, செபம், பிறரன்பு செயல்கள் இவற்றை புதுப்பித்து கடந்துபோன காலங்களின் பலவீனங்களை மன்னித்து வாழ நாம் அனைவரும் இந்த திருவருகைக் காலத்தில் அழைக்கப் பட்டுள்ளோம்.


பெற்றோராகியவர்கள் குடும்பங்களில் நல்லுறவை வளர்க்கவும், பிள்ளைகளை ஆன்மீகத்தில் வழிகாட்டவும் அழைக்கப்படுகிறார்கள்.

நம் வாழ்வு, கற்கைமுறை, ஆன்மீகம் என்பவை நாம் வாழும் சூழலினால் மாற்றம் கண்டிருக்கிறது. இவற்றின் மத்தியில் இறைவனின் கொடைகளாகிய பிறர் நலம், ஆன்மீக வாழ்வு, திருவழிபாட்டு சடங்குகள் என்பவற்றை இறுதிவரை நம்பிக்கையோடு கடைப்பிடிக்க முயலுவோம். வாழ்வையும் வழிபாட்டையும் ஒன்றாக்க முயற்சிப்போம்.

மார்கழித் திங்களில் எம் மத்தியில் பிறக்கப் போகிறார் யேசு பாலன்.

அன்பென்ற காணிக்கை ஏந்தி அவர் பாதம் பணிந்திடுவோம்.

**சுகி கனிசியஸ்**



# OZWAY CARAVANS



Freedom to choose from

Standard Layouts



Customised Layouts



[hello@ozwaycaravans.com.au](mailto:hello@ozwaycaravans.com.au)

**27 McKellar Wy,**

**Epping VIC 3076**

# கிறிஸ்மஸ் நாள்



சர்ப்பம் தந்த பாவத்தை
கர்ப்பம் வந்து தீர்த்த நாள்
மரத்தால் விளைத்த பாவத்தை
வரத்தால் களைந்த மந்திர நாள்

வார்த்தை ஒன்று மனிதனாய்
வடிவெடுத்த நல்நாள்
தொழுவம் ஒன்று
வணக்கம் பெற்ற புண்ணிய நாள்

மந்தைகள் வணங்க
மரிமைந்தன் உதிந்த அதிசய நாள்
அன்பெனும் மழையில் அகிலம் நனைய
இறைமகன் பிறந்தநாள்

மக்களோடு மக்களாய்
மனிதருள் மாணிக்கம் தோன்றிய நாள்
துன்பம் களைந்து துயரம் துடைக்க
விண்ணக தேவன் புவியில் அவதரித்த புனிதநாள்

விடிவெள்ளி ஒன்று வழிகாட்ட மூவிராசாக்கள் வந்து
பாலகனைத் தொழ வித்திட்ட பெருநாள்
மானுடர்களை இரட்சிக்க
மார்கழிக் குளிரில் இயேசுபிரான் ஜனித்த நாள்

பாரில் வஞ்சகம் ஒழிய, பொய்மை சாக
பொறாமை மறைய, அநீதி தோற்க
நோய் நொடிகள் அகழ, வருந்தும் மனங்கள் குளிர
ஒற்றுமை ஓங்கிட, ஒடுக்கப்பட்டோர் உரிமை வாழ்வு பெற
வாய்மை வெல்ல, நீதி நேர்மை நிலைக்க

மனிதரை பாவத்தில் இருந்து மீட்க, மண்ணுலகின் நிலத்தில்
இறமையைத் துறந்து, இறையரசின் மகிமையை
அகிலத்திற்கு வழங்க, அமைதியின் தூதனாய்
மன்னவன் ஜனித்த நாள், மகிழ்ச்சி பொங்கும் கிறிஸ்மஸ் நாள்.

**நினா டேறியஸ்**



# Ranjana Fashion






Fascinating shopping for you and your dear ones

258 Blackburn Road,
Mount Waverley,
Victoria 3150,
Australia
Phone: (03) 9803 3503
Mobile: 0403 114 783
0433 334 489
Email: leopillaij@hotmail.com

கரை தழுவும் அலையென
என்னை தழுவாயோ
முகம் மறையும் நிலவே
என்னை அறியாயோ

மன்னவன் பிறந்திருக்க
மகிழ்வில் நிலைத்திருக்க
சிகரம் காணாயோ - வாழ்வின்
சுவையும் நாடாயோ

வசந்தத்தின் வனப்பதனை மெல்ல
வாழ்வின் உயரம் செல்ல
தந்தவன் நீதானே

புகழ் உயர்ந்து இங்கு
புனிதம் கண்டு வென்று
இறைமகன் காணாயோ - இவன்
புகழ் தேடாயோ!

மார்கழி குளிர் அன்று
மானுடல் உயிர் கொண்டு
மன்னவன் பிறந்த நாள் - இது
வாழ்வின் வசந்த நாள்

என்னவன் வருகை கண்டு
என்னுள்ளே விரைந்து சென்று
உவகை கொள்ளாயோ - இன்று
உலகை வெல்லாயோ!

**என்டனி ராஜ்குமார் சூசை**

# PERPETUA MONEY TRANSFER
**Worldwide**

Send Money to any Bank in Sri Lanka

Hub Arcade, 28/15-23 Langhorne St.
Dandenong, Victoria 3175
Mob: 0423 094 478
Tel/Fax: 03 8712 1406
Email: pmoneytransfer@ymail.com

Direct Deposite
Perpetua Money Transfer
BSB No: 033186
Acc No: 401283
Westpac Bank Australia

# SYNERGY'S CURRY COURT

SRI LANKAN & SOUTH INDIAN TAKE AWAY & CATERING

**We do cater for any occasions**
**Please call 9437 8000**

Re-discover the authentic taste of home!

**Opening Hours:**
Tuesday – Sunday: 11:30am to 9:00pm
Monday: Closed

nathan197166@yahoo.com
Shop 33, 314 - 360 Childs Rd,
Millpark
(at **STABLES** shopping centre,
Next to Commonwealth Bank)







# 5A's Cake & Decoration

**Custom cakes and Decorations**



**Mob: 0431 305 310**
**Maiden Gully Rd,**
**Maiden Gully**
**Bendigo**
**VIC 3551**

# PROTECQ ICT SOLUTIONS




## PROTECQ is a specialized company in providing high-quality IT support and services across Australia.

**Managed IT Services**
We carry the responsibility to monitor and continuously maintain your devices, servers and network

**IT Consultancy**
We have the capacity and capability to demonstrate the best IT consultancy in

**Cloud Services**
We help you to work anywhere from the world for 24/7. Never worry about buying a server

**Communications**
Cloud hosted PABX systems, SIP servers, IP telephone systems, IVR Auto Attendant etc.

**Cloud & Infrastructure**
Finding right infrastructure and the cloud solution is important so that it will reduce the IT cost and scale infrastructure quickly to meet

**IT Security**
Our experience and the powerful cybersecurity system provide you and your team to work in a safe online environment.

**Backup & disaster Recovery**
Keeping your company's data safe is important and critical as there is a notifiable data breaches occurs in the business world.

**Helpdesk & Support Services**
We offer help desk service to all our clients during the business hours on weekdays at other times there is an emergency service.

- Web Design
- Website maintenance
- Web Hosting
- SEO (Search Engine Optimization)
- SEM (Search Engine Marketing)
- SMM (Social Media Marketing)
- Email/Newsletter Marketing
- Logo / Flyers / Business Cards Design

Gnanam Art Creation - Mob 0409 826 521



## Contact us

Sales 1300 945 649

Support 03 8657 0525

info@protecq.com.au

Unit 01/73 Eucumbene Dr,
Ravenhall VIC 3023